குறுந்தலைப்பு முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுக் பெறுதல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 32/70).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 32/70)-வை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள மேதகு ஆளுநரவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) ஒரு மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்படுகிறதாகச் சொல்லப்படுகிறதோ, அக்காரணம் இல்லாத சூழ்நிலையில் அம்மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள அவசியமின்மை குறித்து.

திரு. க. இராமமூர்த்தி: On a point of Order இந்த மசோதா குறிப்பிட்ட ஒரு காரணத்தை முன் வைத்து அதற்காகத்தான் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதன் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ பகுதியில் இந்த மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்படுகிறது என்பதை விளக்கி இருக்கிறார்கள்.

The Government have received information about the proposal of the private operators to take their vehicles off the road on the 15th August 1970. Such stoppage of motor vehicles would have caused considerable inconvenience to the public. It was therefore considered necessary to provide uninterrupted service to the public. As the number of motor vehicles available with the Government were not sufficient for the purpose, it was necessary to take power to requisition the motor vehicles belonging to private operators.

இந்த மசோதாவினுடைய நோக்கம் இன்றையதினம் நிறைவேறிவிட்டது. ஏனென்றால் ஆகஸ்ட் 15-ம் தேதியை நாம் கடந்துவிட்டோம். இந்த அவசரச் சட்டத்தை என்ன காரணத்திற்காகக் கொண்டுவருகிறார்களோ, அந்த சூழ்நிலை ஏற்படவில்லை. ஆகவே இந்த மசோதா 'it is infructnous.' கருவிலேயே சிதைந்து விட்டமாதிரியாகும். ஆகவே அவசியம் இல்லாத சூழ்நிலையில் இந்த மசோதா இன்றையதினம் கொண்டுவரப்படுகிறது. என்ன காரணத்திற்காக இது கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறோமோ, அந்தக் காரணம் இன்றையதினம் நாட்டில் இல்லை. என்ன காரணத்திற்காக இது கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறதோ, அந்தச் சூழ்நிலை இன்றைய தினம் நாட்டில் இல்லாத நிலைமையில் இப்படி ஒரு மசோதாவைக் கொண்டு